# தமிழனின் கடவுள் வழிப்பாட்டில் நிறைந்துள்ள அறிவியல் உண்மைகள்

**ஜெ. திருப்பதி**
*முனைவர் பட்ட ஆய்வு மாணவர்*
*கணேசர் கலை அறிவியல் கல்லூரி*
*மேலைச்சிவபுரி*

**"எள்ளினிருந்து எண்ணெய் எடுபது வதுபோல**
**இலக்கி யத்தினின் றெடுடுபடும் இலக்கணம்"**

இன்று நமக்கு கிடைக்கும் நூல்களின் மிகப் பழமையான நூல் தொல்காப்பியமாகும். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருக்கிறத. எழுத்தும் சொல்லும் தமிழ்மொழியின் அழகை விளக்கி நிற்பன. பொருள், அம்மொழி பேசும் தமிழரின் உயர்ந்த ஒழுக்கத்தைச் சிறப்பாய் எடுத்து இயம்புவதாய் அமைகிறது.

பழந்தமிழன் வாழ்க்கையை அகம், புறம் என இரு பிரிவுகளாகப் பகுத்தான். ஒத்த தலைமகனும் தலைமகளும் உள்ளம் ஒன்றுகூடி வாழும் நிலையை அகமெனவும் போர், கொடை வென்றிச் சிறப்பு முதலியவையை உள்ளடங்கியது புறமெனவும் கண்டான்.

மனிதனின் வாழ்க்கையில் ஒழுகிய பல்வேறு நெறிகட்கும் அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதிகட்கும் தொடர்புகண்டு புதிய மரபினைத் தோற்றித்தவர்கள் தமிழர்களாவர்கள். அவை தான் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பவனவாம்.

### முதற்பொருள்

மக்கள் வாழ்ந்த நிலப்பகுதியே ஒழுகிய பல்வேறு நெறிகளை உள்ளடக்கியே நிலத்தினை ஐந்தாகப் பகுத்து அதனையே முதற் பொருளாகக் கொண்டனர். அவையே முறையாக மலையும் மலையைச் சார்ந்த இடம் குறிஞ்சி எனவும். காடும் காட்டைச் சார்ந்த இடம் முல்லை எனவும் வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம் எனவும். கடலும் கடலைச் சார்ந்த இடம் நெய்தல் எனவும், முல்லையும் குறிஞ்சியும் திரிந்த வளம் குறைந்த இடம் பாலை எனவும் பகுக்கப்பட்டிருந்தது. ஐவகை நிலம் மற்றுமல்லாது. அங்கு ஒழுகிய நெறிகளானபொழுதினை, அறுவகை பெரும்பொழுதுகளாகவும் அறுவகை சிறுபொழுதுகளாகவும் உள்ளடக்கியே முதற்பொருளைப் பகுதிட்டனர் தமிழர்.

### கருபொருள்

ஐவகை நிலமும் அறுவகைப் பெரும்பொழுதும் சிறு பொழுதும் முதற்பொருள் என்றும், அவற்றில் தோன்றிய தெய்வம் முதல் யாழ் ஈறான பதினான்கும் கருபொருளாகவும் கொள்ளப்பட்டது.

### உரிப்பொருள்

ஐந்துவகைநிலத்தில் வாழ்ந்திட்ட மக்களின் வாழ்வியல் ஒழுகலாறுகளைக் கொண்டு குறிஞ்சிக்குக் கூடலும் கூடல் நிமித்தமும், முல்லைக்கு இருத்தலும் இருத்தல் நிமித்தமும், மருதத்திற்கு ஊடலும் ஊடல் நிமித்தமும் நெய்தலுக்கு இரங்கலும் இரங்கல் நிமித்தமும், பாலைக்குப் பிரிதலும் நிமித்தமும் உரிப்பொருள்கள் எனப்பட்டன. எனவே தான் பழந்தமிழ் இலக்கியம் இயற்கையைக் கூறிப்போந்த நிலையிலும் மக்களின் வாழ்வே அதன் உட்பொருளாகவும் உரிப்பொருளாகவும் விளங்குவதைக் காணமுடிகிறது. இதனின்று இயற்கையோடியைந்த இன்ப வாழ்வையே தமிழர் வாழ்ந்தனர் என்பது அறியக்கிடைக்கிறது.

### நம்பிக்கைகள்

ஒரு செயல் தொடர்ந்தால் பழக்கமாகும். பழக்கததைத் தொடர்ந்து செய்வது வழக்கம் எனப்படும். அந்த வழக்கமானது மற்றவருக்கு கடத்தப்படும்போது சடங்காகும். அச்சடங்குகளை நிலைநிறுத்தும்

பொருட்டுச் செய்வதே நம்பிக்கை எனப்படும். மக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவைதாம் பண்பாடாக மலர்கின்றன என்கிறார் மானிடவியல் பேரறிஞர் டெய்லர் அவர்கள் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும், சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையில் தோன்றியவையாகும். நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர்.

நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்சவுணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராதபொழுதும், மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுதம் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன.

### வழிப்பாட்டின் தோற்றம்

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகமல் இருக்க எண்ணியே இயற்கையை வழிபட முற்பட்டான். அதனடிப்படையில் தான் இயற்கை வழிபாடுகளும், விழாக்களும் தோற்றம் பெற்றன எனலாம். பலிகள் தருவதன் மூலம் இயற்கையின் சீற்றத்திலிருந்து விடுபடலாம் என்ற நம்பிக்கையன் அடிப்படையில் தான் விழாக்களும், கொண்டாட்டங்களும் தோன்றின. காலப்போக்கில் மனிதன் இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கினான். இவ்வகையிலேயே மக்களிடையே உருவ வழிபாடு தோற்றம் பெற்றிருக்கக் கூடும்.

உளவியல் பேரறிஞர் சிக்மண்ட பிராய்டு (SIGMUND FRAUD) அவர்களும் இயற்கையிடமும், மரணத்திற்கப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது என்கிறார்.

### இயற்கை வழிபாடு

ஆதிமனிதன் இயற்கையோடியைந்த வாழ்ந்த நடத்தினான். இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டதின் விளைவாக இயற்கையை வழிபட ஆரம்பித்தான். இயற்கையை வழிபட்டு விழாவெடுத்து நன்றிக்கடன் அற்ற விரும்பினான். இயற்கையில் கண்ட பெருநிகழ்ச்சிகளை உள்ளத்தே கொண்டு அஞ்சியதாலேயே இவ்வழிபாடுகள் தோன்றின. இயற்கையின் தோற்றங்களாகிய கதிரவன், மதி, மழை மின்னல், இடி முதலான பொருள்களைக் கண்டு ஏற்பட்ட வியப்பு, அதிர்ச்சி, அச்சம் போன்ற உணர்வுகளிலிருந்து விடுபடவும், நலன் பெருகவும், நன்றிக்கடன் செலுத்தவும் இயற்கையை வணங்கத் தொடங்கினான. கதிர் வழிபாடும் மாரி (மழை) வழிபாடும் விண் வழிபாடும், மண் வழிபாடும் இப்படித்தான் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். கதிரவனின் இயக்கமும், மதியின் இயக்கமும், பருவங்களின் மாறுதல்களும். இயற்கை நியதியின் விளைவும் மனிதனின் மனதில் ஒரு மாற்றத்தை உண்டாக்கிச் சமய வாழ்வுக்குள் அழைத்துச் சென்றது எனலாம்.

### ஏனைய வழிபாடுகள்

பழந்தமிழர் இயற்கை வழிப்பாட்டில் தொடங்கி ஆவியுலக வழிபாடு, குலக்குறி வழிபாடு, புனிதபோலிப் பொருள் வழிபாடு, முன்னோர் வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என பல்வேறு வழிபாட்டு முறைகளை கொண்டிருந்தனர் என்பது தமிழர்களின் வாழ்வியலிருந்து தெரிய வருகிற உண்மைகளாகும். அவற்றில் இன்றளவு மக்களிடையே, பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு போன்றவைகளே பெரும்பான்மை வகிப்பதை நாம் காண்கிறோம்.

### தெய்வ வழிபாடுகளும் அறிவியல் உண்மைகளும்

இயற்கை வழிபாட்டில் தொடங்கிய மக்களின் வழிபாடு, சிறு தெய்வ வழிபாடாக மலர்ந்தது. அதுவே பின்னர் சிறு தெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என இரு வகையான வழிபாடாகத் தோன்றின. இவ்விரு வழிபாடுகளிலும் இயற்கையோடு இயைந்த அறிவியல் கூறுகள் உள்ளடங்கி இருப்பது நம் முன்னோர்களின் மூதறிவையே எடுத்துக்காட்டுகிறது.

### மாரியம்மன் வழிபாடு

தமிழகமெங்கும் மாரியம்மனின் வழிபாட்டை காணமுடிகிறது. ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது. எனற நம்பிக்கையை மக்களிடம் காணலாம். இம்மாரியம்மன் வழிபாடு என்பது சிறுதெய்வ வழிபாடாக இருக்கின்றப்பொழுதும், இவை அச்சத்தின் காரணமாகவும், வளமைக்காகவும், இயற்கையின்

சீற்றம் தணியவும், அம்மை, காலரா போன்ற நோய்கள் வராமல் தடுக்கவுமே கொண்டாடப்பட்டன என்பது ஆய்ந்து நோக்கின் அறியப்படும் உண்மையாகும்.

மாரியம்மன் வழிபாடு என்பது 'நான்கு' பருவங்களில் வசந்த காலத்திற்கும், இலையுதிர் காலத்திற்கும் இடையே வரக்கூடிய வெப்பம் மிகுந்த காலமான "கோடைகாலத்தில்" நடைபெறுவதாகும். கோடைகாலம் என்பது "இளவேனில்" காலத்தில் சித்திரை, வைகாசி மாதம் தொடங்கி "முதுவேனில்" காலத்தில் ஆனி, ஆடியை உள்ளடக்கியதாக இருக்கிறது. எனவே தான் மாரியம்மன் வழிப்பாட்டில் இயற்கையோடியைந்த பல அறிவியல் உண்மைகள் இருப்பது தெரியவருகிறது.

### மாரியம்மன் வழிபாடு ஏன்?

'மாரி' என்றால் 'மழை' என்றும், 'அம்' என்றால் நீர் என்றும், 'அன்' என்றால் இன்மை என்றும் பொருளாகும். மேகமாயிருக்கும் மழையின் நீரானது இம்மையாம் பூமிக்கு வர வேண்டி வழிபடும் நிகழ்வே மாரியம்மன் வழிபாடு ஆகும். சித்திரையில் தொடங்கும் வெயில் காலம் வைகாசி, ஆனி, ஆடியில் முடிவுறுகிறது இந்த காலங்களில் அதிகமான வெப்பம் நிலவுவதால், விவசாயத்திற்கும் அன்றாடத் தேவைக்கும் நீரானது இன்றியமையாதது ஆகிறது. அது மட்டுமின்றி வெப்பம் மிகுதியாக இருப்பதனால் அம்மை காலரா போன்ற நோய்களின் தாக்கமும் அதிகமாயிருக்கும் இவற்றிற்கு எல்லாம் தீர்வாய் மழையானது மண்ணில் வரவேண்டிய இவ்வழிபாடு நடக்கிறது.

### மாரியம்மன் வழிபாடும் அவற்றிலிருக்கும் அறிவியலும்

### முளைப்பாரி எடுத்தல்

மாரியம்மன் வழிபாட்டின் போது முளைப்பாரி எடுப்பது என்பது ஒரு வழக்காகும். இது ஆடி மாதம் முடிந்து வரப்போகிற கார் காலத்தில் பயிர் செய்வதற்கான ஆயத்தப் பணியின் தொடக்கச் செயலாகும். ஒவ்வொருவரும் தாம் எந்தப் பயிரினை பயிர் செய்யப்போகிறோமோ அந்தப் பயிரினை முளைக்கட்டி வைத்துக் கொண்டு கார் காலத்தை எதிர் நோக்கி காத்திருந்து கார் காலத்தை வரவேற்கும் செயலே முளைப்பாரி எடுத்தலாகும்.

### வேம்பை வணங்குவது

வேப்பமரத்தையே அம்மனாக நினைத்து வழிபடுவதும், மாரியம்மன் வழிபாட்டின் போது மாவிலைத் தோரணம் கட்டுவதும் அவற்றிலிருக்கும் அறிவியல் பயனைப் பெறவே நிகழ்த்தப்பட்டதாகும். இயற்கையிலேயே வேப்பிலையும், மாவிலையும் ஒளிச்சேர்க்கையின் மூலம் இரவில் கூட அதிக நேரம் பிராணவாயுவை வெளிப்படுத்தும் தன்மை உடையதாகும். சித்திரை முதல் ஆடி வரையிலான இந்தப் பருவத்தில் வெப்பம் மிகுந்து காணப்படுவதால் இயல்பாகவே மனிதனுக்கு பிராணவாயுவின் தேவை அதிகரிக்கும், அதுமட்டுமல்லாது தோல் சார்ந்த நோய்களும், வயிறு சார்ந்த நோய்களும் மிகுதியாகும், பிராணவாயுவின் தேவையையும், வயிறு மற்றும் தோல் சார்ந்த நோய்களினை களையவுமே வேப்பிலைத் தோரணமும், மாவிலைத் தோரணங்களும் கட்டப்பட்டதும், வேப்ப மரத்தினையே அம்மனாக நினைத்து வழிப்பட்டதின் முக்கியக் காரணமுமாகும்.

### மஞ்சள் நீராடுதல்

மாரியம்மன் வழிபாட்டின் போது நிகழும் மற்றுமோர் சிறப்பு. மஞ்சள் நீராடுதல் என்பதாகும். மாரியம்மன் திருவிழாவின் போது காப்புக் காட்டிய பக்தர்களின் மீதும் அவர்கள் நடந்து வரும் வீதிகளிலும் மஞ்சள் நீரினை ஊற்றுவதையும் திருவிழாவின் இறுதி நாளில் மஞ்சள் கலந்த நீரினை ஒருவர் மீது ஒருவர் ஊற்றிக்கொண்டு விளையாடுவதையும் காணலாம். இது ஒரு விளையாட்டுப் போலத் தோன்றினாலும் அவற்றின் பின்னும் அறிவியலை வைத்தனர் நம் ஆதித்தமிழர்.

கோடைக்காலத்தில் வரும் அம்மை நோய்களில் ஒன்றானது தட்டையம்மை இவ்வகை அம்மை கொப்புளங்களாக காட்சியளிக்கும். இக்கொப்புளங்கள் வெடித்துச் சிதறும்போது அவற்றிலிருந்து வெளிவரும் திரவத்திளிருக்கும் கிருமியானது வெப்பம் மூலமும், காற்றின் மூலமும் பரவும் தன்மை கொண்டது. அதுமட்டுமன்றி அவ்வேளையில் நிகழும் துரித பருவமாற்றத்தின் காரணமாகவும் இது வேகமாக பரவும். இந்நோயானது பரவாமல் இருக்கவும், நோயைக் கட்டுப்படுத்தவும், நோய்க்குத்தீர்வு காணவுமே, சிறந்த நோய்க் கொல்லியான மஞ்சளை நீரில் கலந்து ஊற்றுகின்றனர். இவை மட்டுமின்றி மஞ்சள் கலந்த நீரினைப் பருகவும் செய்வர். இதனால நீரினில் நிலவும் தொற்றினால் ஏற்படும் காலரா போன்ற நோயும்

தீரும் என்ற ஆழ்ந்த அறிவாற்றலை எமது ஆதித்தமிழர் பெற்றிருந்தனர் என்பது உண்மை. இதுவே மஞ்சள் நீராட்டு விழாவில் உள்ள ஆழமான உண்மை இம்முறையே தற்போது பல வண்ணங்கள் கொண்டு கொண்டாடப்படும் "ஹோலிப்" பண்டிகையின் முன்னோடியாகும்.

### மாவிளக்கு எடுத்தல்

மாரியம்மன் வழிப்பாட்டில் மற்றுமோர் சிறப்பு 'மாவிளக்கு' எடுக்கும் நிகழ்வு என்பதாகும். மாரியம்மன் வழிபாடு என்பது இயற்கையை வணங்கும் முறையாதலாலும், மழைப் பொழிந்து விவசாயம் செழிக்க வேண்டிச் செய்யும் வழிபாடு என்பதாலும், விவசாயத்தின் முதல் பயிரானத் திணையைக் கொண்டு தயாரித்திட்ட உணவான தினைமாவினை விளக்காக்கி நன்றிக்கடன் செலுத்தும் முறையே மாவிளக்கு எடுக்கும் நிலையாகும்.

மழை இல்லாது காலத்து மழை வேண்டியும், விளைச்சல் பெருகவும், வெப்பக் காலத்தில் வரக்கூடிய அம்மை, காலரா போன்ற நோய்நொடிகள் வராதிருக்கவுமே, சிறு தெய்வ வழிபாடாம் மாரியம்மன் (மழை பூமிக்கு வரவேண்டி) வழிபாட்டினை கோடைகாலத்தில் புரிந்தனர் நம் முன்னோர்கள் அவற்றின் ஒரு பகுதியாகவே, முளைப்பாரி எடுத்தல், வேம்பினை வணங்குவது, மாவிலைத் தோரணம் கட்டுவது, மாவிளக்கு எடுப்பது போன்ற எண்ணற்ற அறிவியல் சார் உண்மைகளையும் உள்ளடக்கிய இவ்வழிபாட்டினைத் தொன்றுத் தொட்டு நம் தொல் தமிழர் தொடர்ந்து வந்துள்ளனர் என்பது வியக்கத்தக்க உண்மையாகும்.

### மூல ஆதாரங்கள்

1. தமிழ் இலக்கிய வரலாறு — முனைவர். சி. பாலசுப்பிரமணியன், மணமலர் பதிப்பகம்
2. நாட்டுப்புறவியல் ஆய்வு — முனைவர். சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம்
3. தமிழர் நாகரிகமும் பண்பாடும் — முனைவர். அ. தட்சிணாமூர்த்தி, யாழ் வெளியீடு
4. சிறு தெய்வ வழிபாடு — பயோஸ்கோப் காணொளி விழியம்
5. தமிழரின் வரலாறு — தமிழர் உலகம் காணொளி விழியம்
6. தமிழகராதி - தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை
7. நாட்டுப்புற நம்பிக்கைகள் — தமிழவன்
8. சேயோன் பற்றிய விளக்கம் — தமிழர் உலகம் காணொளி விழியம்
9. தொல்காப்பியம் — அகத்திணையில், இளம்பூரணர் உரை
10. மாரியம்மன் இடை நிலைத் தெய்வம் — கு.ஜோஸ்பின் கலா, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவை, புதுதில்லி
11. மாரியம்மன் வழிபாடு — விக்கிபீடியா வலைதளம்